**செய்தி வெளியீடு எண்: 783** **நாள்: 27.10.2018**

**செய்தி வெளியீடு**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 111–வது பிறந்த நாள் மற்றும் 56–வது குருபூஜை அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 111–வது பிறந்த நாள் மற்றும் 56–வது குருபூஜை விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் 30.10.2018 அன்று காலை 8.30 மணியளவில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இளம் பருவத்திலேயே தனது மனதிற்கு சரியெனப்பட்டதைத் துணிந்து செய்யும் துணிவும், உறுதியும் படைத்தவராய் வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 30ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், தமிழ்நாட்டின் தென்கிழக்கு மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி அருகிலுள்ள பசும்பொன் என்கிற சிற்றூரில் மிகுந்த வசதி படைத்த குடும்பத்தில் அக்டோபர் 30, 1908இல் உக்கிரபாண்டித் தேவருக்கும், இந்திராணி அம்மையாருக்கும் பிறந்த மகனாவார். இவரது தாயார் இவருக்கு ஒரு வயது நிரம்பும் முன்பே காலமானார். அது முதல் இவருக்கு தாய்ப் பால் ஊட்டி வளர்த்தவர் சாந்த பீவி என்ற இசுலாமிய அம்மையார்.

ஜமீன் குடும்பத்தில் பிறந்தாலும் தேவர் திருமகனார் ஜமீன் விவசாயிகள் படும் துயரையும், அவலத்தையும் நன்கு அறிந்தவர். அவர்களின் அல்லல்களை போக்குவதற்காக

‘தமிழ்நாடு ஜமீன் விவசாயிகள் சங்கம்’ என்ற அமைப்பை நிறுவினார். தென் தமிழ்நாட்டில் வாழும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை ஒடுக்குவதற்காக ஆங்கிலேய அரசு அமல்படுத்திய ‘குற்றப் பரம்பரைச் சட்டம்’ என்ற கொடிய சட்டத்தை எதிர்த்து வெற்றி கண்டவர். திருமணம் செய்து கொண்டால், தானும் இல்லற வாழ்வில் பிணைந்து நாட்டுக்கு தொண்டாற்ற முடியாது என்று எண்ணி திருமணத்தை வெறுத்தார். மகான் விவேகானந்தரைப் போல் அவரும் கடும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தார். நேதாஜி 1937இல் பார்வார்டு பிளாக் கட்சியை தொடங்கினார். ‘வேண்டிய விடுதலை விரைவில் வரவேண்டும்’ என்பதால்தான் தேவர் பார்வார்டு பிளாக்கில் சேர்ந்து நேதாஜியின் வழியில் நடக்கத்தொடங்கினார். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 30.10.1963 அன்று இறைவன் திருவடி சேர்ந்தார்.

தமிழக அரசின் சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 111–வது பிறந்த நாள் மற்றும் 56–வது குரு பூஜை விழாவினை முன்னிட்டு, வருகின்ற 30.10.2018 அன்று காலை 8.30 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவிடத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தவுள்ளார்கள். இந்நிகழ்வில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு.க.பாஸ்கரன் அவர்கள், தமிழ்நாடு வக்பு வாரியத்தலைவர் மற்றும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, பிற்பகலில் நடைபெறும் விழாவில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்துவைக்க உள்ளார்கள். மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார்கள். இந்நிகழ்வில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மேலும், 30.10.2018 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை, நந்தனம் சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து, அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**